செய்தி வெளியீடு எண்: 567　　　　　　　　　　　　　　　　　　　　　　நாள் : 06.11.2015

## செய்தி வெளியீடு

### தைவானில் உள்ள ஹுவாலியனில் (Hualien) 35வது உலகக் கவிஞர்கள் மாநாட்டில் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கவிஞர் டாக்டர் யூஷி அவர்கள் பாராட்டு

---

தைவானில் உள்ள ஹுவாலியனில் (Hualien) 35வது உலகக் கவிஞர்கள் மாநாடு 06.11.2015 அன்று நடைபெற்றது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுடைய அறிவிப்புகளின் பேரில் திருக்குறள், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள் மற்றும் ஔவையாரின் ஆத்திச்சூடி ஆகியவற்றை சீன (மாண்டரின்) மொழியில் மொழியாக்கம் செய்த உலகப் புகழ்பெற்ற கவிஞர் டாக்டர் யூஷி அவர்களால் இம்மாநாடு தொடங்கி வைக்கப்பட்டது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் வாழும் கவிஞர்களுக்கும் அறிஞர் பெருமக்களுக்கும் சிறப்புச் செய்வதற்காக பண்டைய தமிழ் கவிஞர்களின் பெயர்களில் பல விருதுகள் வழங்கி, தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை செய்ததற்காகவும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாளை ‘‘தமிழ் கவிஞர்கள் நாளாக’’ அறிவித்தததற்காகவும் கவிஞர் டாக்டர் யூஷி அவர்கள் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களை பாராட்டினார்.

மேலும் மறைந்த டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளை உலக இளைஞர்கள் தினமாக அறிவித்து அவரை நினைவுக்கூறும் விதத்தில் அவர் பெயரால் ஒரு விருதினை ஏற்படுத்தியதற்காக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் அரும்பணியை கவிஞர் டாக்டர் யூஷி அவர்கள் பாராட்டி பேசினார்.

பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளை மொழியாக்கம் செய்யும் பணியை நிறைவு செய்யும் நோக்கில் தைவான் வந்திருந்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் முனைவர் மூ.இராசாராம், இ.ஆ.ப அவர்களும், அவரது குழுவினரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**